MCOP NO 790 / 2015 Name: ஜனார்தனன் கிரிடி P W: 1 11.10.2018.

**ம.சா. 1 இன்று (11.10.2018 ) குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:—( 2—ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

**( 1—ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாகவும், தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்வதாகவும் 2—ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது).**

ஹோண்டா சைன் டி.என் 45 பி இ 1161 வாகனம் என்னுடையது. அந்த வாகனத்தை விபத்து சமயத்தில் நான் தான் ஓட்டினேன் என்பது சரி. நான் 1—ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையின் பொழுது என்னுடைய முந்தைய பணிசம்மந்தமான ஆவணங்கள் உள்ளதாக குறிப்பிட்டதை இன்று கொண்டு வரவில்லை என்பது சரி. உண்மையில் அவ்வாறு எனக்கு எந்த பணியும் இல்லை என்றும், அதனால் தான் இது சம்மந்தமாக ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் தவறு. நான் குறிப்பிடுவது போல் ஒரு நிறுவனமே இல்லை என்றால் தவறு. நான் இந்த வழக்கு விசாரணைக்காக ஒவ்வொரு முறையும் பேருந்தில் தனியாகத்தான் வந்து செல்கின்றேன் என்பது சரி. நான் பூரண குணமடைந்து விட்டேன் என்றும், எனக்கு எந்தவித ஊனமும் இல்லை என்றும் சொன்னால் தவறு. நான் முன்பு போல் அனைத்து வேலைகளையும் இயல்பாக செய்ய முடியும் என்றால் தவறு. இழப்பீடு அதிகம் கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் மாதம் ரூ.8,000/— சம்பாதித்ததாகவும், போனஸ் ரூ.10,000/— பெற்றுவந்ததாகவும் பொய்யாக கூறுகின்றேன் என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள மெடிக்கல் பில்கள் பொய்யானவை என்றால் தவறு.

**மறுவிசாரணை:— இல்லை.**

ஒம்/—அ.முரளீதரன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.